Government Hospital, Hosur

*690 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the construction of additional buildings for Government Hospital at Hosur in Dharmapuri district has been completed ;

(*b*) whether arrangements to provide X-ray facilities there have been made ; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தர்மபுரி மாவட்டம் ஒசூரில் 25 படுக்கைகள் கொண்ட ஒரு புது மருத்துவ மனை கட்டுவதற்கான வேலைகள் பொதுப்பணித் துறையினரால் எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன.

(இ) & (உ) : 100 எம். ஏ. எக்ஸ் கதிர் வீச்சுக் கருவி ஒன்று வாங்கப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் முடிந்ததும் அந்தக் கருவி பொருத்தப்படும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Health how long will it take to complete the construction work ? It has been going on since two long years and may I know whether additional doctors will be posted, especially lady doctors.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 25 படுக்கைகள் உள்ள மருத்துவ மனை என்று வருகிற போது நிச்சயமாக ஒரு பெண் மருத்துவர் நியமிக்கப்படுவார். கட்டிட வேலைகள் என்று வருகிறபோது, சில இடங்களில் சில காரணங்களால் வேலை தடைப்படுகிறது. அரசாங்கம் பல்வேறு இடங்களில் பல்வேறு முறையில் கட்டிடங்கள் கட்டுகிறது. குறிப்பிட்ட காரணத்தால் தாமதம் ஏற்பட்டால், அதைத் தெரிவித்தால், அது துரிதப்படுத்தப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த மாதிரி எக்ஸ்-ரே சாதனங்கள் திருச்சி மாவட்டத்தில் எத்தனை நியமிக்கப்பட இருக்கிறது ? அவைகள் எந்தெந்த ஊரில் அமைக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதற்கெல்லாம் தனிக்கேள்வி போடவேண்டும். ஒசூரிலிருந்து திருச்சி கிட்டத்தட்ட 120 மைல் இருக்கும் என்று கருதுகிறேன். அவர் விரும்புகிற அந்த ஊரில் எக்ஸ்-ரே கருவிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

1974 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 691, 692 ஆகியவைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகின்றன.

மதுரை மில்லுக்கருகில் மேம்பாலம்.

*693 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தம் மதுரை மில்லுக்கருகில் கட்டப்பட்டு வரும் ரயில்வே மேம்பால வேலையின் மொத்த மதிப்பீடு என்ன ?

(இ) அவ்வேலை எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 32·30 இலட்சமென மதிப்பிடப்படுகிறது. (இ) விரைவில் முடிவுறும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, பழங்காநத்தத்திற்கு அருகில் கட்டப்பட்டிருக்கிற ரயில்வே மேம்பாலத்தின் கீழே காலியிடம் இருக்கிற காரணத்தால், அந்த இடங்களைத் தொழில் நடத்தக் கேட்பவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த மாதிரி மேம்பாலம் கட்டும்போது, அதற்கு மாற்றுப் பாலம் கட்டுகிறார்கள், அப்படிக் கட்டாமல் இருந்தால் அந்த இடத்தைக் கடந்து நடந்து செல்ல முடியவில்லை. அங்கே போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, பாலம் கட்டும்போதே தனியாக ஒரு மாற்றுப்பாதை கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எங்கே பாலம் கட்டுவதாக இருந்தாலும் மாற்றுப் பாலம் கட்டுவதற்கும் சேர்த்துத்தான் மதிப்பீட்டில்